## 80. உந்தன் நாமம் மகிமைபட

### பல்லவி

உந்தன் நாமம் மகிமைபட வேண்டுமே
அதற்காக என்னை தருகிறேன்

### சரணங்கள்

1. உந்தன் கரத்தில் இசைகருவி நான்
என்னை உமக்காக பயன்படுத்தும்
என்னில் பெயர் புகழ் வேண்டாமே
எல்லா பெயரும் புகழும் உமக்கே
- உந்தன் நாமம்

2. உந்தன் கையில் களிமண் நானே
என்னை வணைந்து பயன்படுத்தும்
என்னில் பெயர் புகழ் வேண்டாமே
எல்லா பெயரும் புகழும் உமக்கே
- உந்தன் நாமம்

3. நீரே எந்தன் சிற்பாசாரி
என்னை உடைத்து உருவாக்கிடும்
என்னில் பெயர் புகழ் வேண்டாமே
எல்லா பெயரும் புகழும் உமக்கே
- உந்தன் நாமம்